1970 நவம்பர் 27]

பாம்பாற்றின் குறுக்கே பாலங்கள்

* 28 வினா.—புலவர் பொ. பொன்னம்பலம்: மாண்புமிகு உணவு, உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

திருமயம் தொகுதியிலுள்ள இரும்பாநாடு செல்லும் சாலையில் பெரும் பாலமொன்று அமைப்பது குறித்து அரசு பரிசீலித்துள்ளதா?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: இரும்பாநாடு செல்லும் சாலையில் பாம்பாற்றிற்குக் குறுக்கே ஒரு பாலம் கட்டும் பணி நான்காம் ஐந்தாண்டு வரைவுத் திட்டத்தில் சேர்க்கப்பட்டுள்ளது.

* 29 வினா.—புலவர் பொ. பொன்னம்பலம்: மாண்புமிகு உணவு, உள்ளாட்சித்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருச்சிராப்பள்ளி மாவட்டம், திருமயம் தொகுதியில் உள்ள ராயவரம்-கொத்தமங்கலம் சாலையின் இடையிலுள்ள பாம் பாற்றின் குறுக்கே பாலம் அமைக்கும் திட்டம் அரசின் பரிசிலனையிலுள்ளதா?

(இ) ஆமெனில், எப்பொழுது?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: (அ) இல்லை.

(இ) இக்கேள்வி எழவில்லை.

Magistrate's Court in Tuticorin

* 30 Q.—THIRU T. MARTIN: Will the Hon. the Minister for Industries be pleased to state—

(*a*) whether there is any proposal pending before the Government of Tamil Nadu to shift the Magistrate's Court in Tuticorin to the compound of the District Munsif's Court; and

(*b*) if so, when it will be done?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: (அ) & (இ) இல்லை.

வலம் வரும் வழக்கு மன்றங்கள்.

* 31 வினா.—திரு. கே. சகாதேவ கண்டர், திரு. வை. சுவாமிநாதன் } மாண்புமிகு தொழில் அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

நடமாடும் கோர்ட்டு வண்டி சென்னையில் இருப்பதைப் போல் மற்ற மாவட்டங்களுக்கு விஸ்தரிக்க ஏதேனும் செயற்குறிப்பு அரசு பரிசிலனையிலுள்ளதா?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: தற்போது மதுரை மாவட்டத்தில் போக்குவரத்துக் குற்றங்களை மட்டும் விசாரணை செய்ய ஒரு வலம் வரும் வழக்கு மன்றம் (Mobile Court) செயல்பட்டு